15

வைப்பூர் ஊராட்சி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்
செயல்முறைகள்

முன்னிலை:- திரு.சி.சந்திரபாபு

ந.க.எண்.11730/2019/ஆ1 நாள். .03.2019

பொருள் : மனைப்பிரிவு ஒப்புதல் - காஞ்சிபுரம் மாவட்டம் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - வைப்பூர் ஊராட்சி கிராமம் - கூழாங்கல்சேரி சர்வே எண்கள்.122/1, 2, ல் 18295 ச அடி பரப்புள்ள இடத்தில் அமைந்துள்ள விற்பனை செய்யப்படாத மனைகள் 7 மட்டும் வரன்முறை செய்து ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல்

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதித்துறை.ந.வ.4(3) நாள்.04.05.2017
2. அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதித்துறை.ந.வ.4(3) நாள்.22.10.2017
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் நகஎண்.1120/2018/செம3 நாள்.12.11.2018
4.வட்டார வளர்ச்சி அலவலர் (கி.ஊ) அவர்களின் கடித ந.க.எண்.11730/2019/ஆ1 நாள்.25.03.2019 மற்றும் 27.03.2019
5.சம்மந்தப்பட்ட ஆவணங்கள்

*******

பார்வை 1(ம) 2 ல் கண்ட அரசாணையின்படி, பார்வை 3 ல் காணும் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் மனை அனுமதி எண்.961(R)2018 ன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், வைப்பூர் ஊராட்சி கூழாங்கல்சேரி கிராமம் சர்வே எண். 122/1, 2, ல் 18295 ச அடி பரப்புள்ள இடத்தில் அமைந்துள்ள விற்பனை செய்யப்படாத மனை எண்கள்.1,4, 6, 7, 11, 15, 16 க்கு மட்டும் வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.21200/- மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.17650/- ஆகியவை பார்வை 4 ல் காணும் கடிதத்தின்படி, உரிய தலைப்புகளில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மவ/நஊதுஇ (செம) எண்.96(R)2018 ன்படி மனை எண்கள். 1,4, 6, 7, 11, 15, 16 ஆக மொத்தம் 7 மனைகளை மட்டும் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு :- மனை வரைபடம்

29/3/19

தனி அலுவலர்/ வைப்பூர் ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை

பெறுநர் :-
திரு.பி.எம்.இலியாஸ்,
எண்.17 எஸ் கே தெரு,
கோடம்பாக்கம் - 24

29/3/19

நகல் :-
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு - 600001

நகல் - வைப்பூர் ஊராட்சி செயலர்/ பதிவேட்டில் பதிந்து வைக்க

17

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,

ந.க.எண். 1120/2018 செம3 நாள் :12.11.18

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், வைப்பூர் ஊராட்சி, கூழங்கச்சேரி கிராமம், சர்வே எண்கள் : 122/1, 2-ல் 18295 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 04.05.17
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 13.10.17
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2 நாள் : 30.10.2017, 31.10.17, 07.11.17, 17.11.2017 (ம) 20.12.2017
4. மனுதாரர் திரு. B.M. இலியாஸ் அவர்கள் விண்ணப்பம் நாள் : 16.02.18

----------------

உத்தரவு :

பார்வை(1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணைகளின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை(4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், வைப்பூர் ஊராட்சி, கூழங்கச்சேரி கிராமம், சர்வே எண்கள் : 122/1, 2-ல் 18295 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ(செம) எண்.96(R)/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : **0.42 ஏக்கர் (18295 ச.அடி)** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : **8** |
| விற்கப்பட்ட மனை எண் | : 2,3,5,9,10,12-14 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : **7** |
| விற்கப்படாத மனை எண்கள் | : 1, 4, 6, 7, 11, 15, 16 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : **7593 ச.அடி** |
| திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : **955 ச.அடி (10.50%)** |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரங்கள் :-

1. பரிசீலனைக் கட்டணம் :

இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம். செலுத்திய மனை எண்களின் விபரம் : **மனை எண்கள். 12-க்கு மட்டும் பெறப்பட்டுள்ளது.** பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத இதர மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த **வேண்டும்.**

2. **வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ம) வளர்ச்சிக் கட்டணம் :**

| மனை எண் | பரப்பளவு (ச.அடி) | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 825 | 76.67 | 2300.19 | 1916.82 |
| 2 | 1200 | 111.52 | 3345.72 | 2788.10 |
| 3 | 800 | 74.35 | 2230.48 | 1858.74 |
| 4 | 1000 | 92.94 | 2788.10 | 2323.42 |
| 5 | 1000 | 92.94 | 2788.10 | 2323.42 |
| 6 | 1005 | 93.40 | 2802.04 | 2335.04 |
| 7 | 1381 | 128.35 | 3850.37 | 3208.64 |
| 9 | 508 | 47.21 | 1416.36 | 1180.30 |
| 10 | 1595 | 148.23 | 4447.03 | 3705.86 |
| 11 | 1000 | 92.94 | 2788.10 | 2323.42 |
| 12 | 1040 | 96.65 | 2899.63 | 2416.36 |
| 13 | 1085 | 100.84 | 3025.09 | 2520.91 |
| 14 | 1130 | 105.02 | 3150.56 | 2625.46 |
| 15 | 1093 | 101.58 | 3047.40 | 2539.50 |
| 16 | 1289 | 119.80 | 3593.87 | 2994.89 |
| **Total** | **15951** | **1482.43** | **44473.05** | **37060.87** |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ம) வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் **செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு :**

| | |
|---|---|
| 0217 Urban Development - 60 other Urban Development Schemes - 800 Other receipts AT Receipts under Regularisation Charges of Unapproved layout and Plots - DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation. (DPC: 0217 60 800 AT 2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) **வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு

19

மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரைமுறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சியால் வசூலித்தல் [illegible] [illegible] தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 13.10.17-ல் விதி எண். 7(g) (ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

12/11/18

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு.

12/11/18

: மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர் : வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் :

1. Thiru. B.M.Illiyas,
S/o. A.M.Basheer,
No.17, S.K.Street,
Kodambakkam,
Chennai - 600 024.
2. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்.
3. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணா சாலை, சென்னை – 600 002.
4. கணக்குப்பிரிவு – செங்கல்பட்டு மண்டலம்.
5. உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
காஞ்சிபுரம்.
6. வட்டாட்சியர்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

(5, 6) — சாலை (ம) OSR பகுதியை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

7. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
சுங்குவார்சத்திரம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

(7) — சாலை (ம) OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.